# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 27 செவ்வாய்க்கிழமை (12.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 287


## ஏ-9 வீதியை விரைந்து திறக்க ஏதுவாக ஸ்ரீ லங்கா அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

### நீதி சமாதானத்துக்கான ஆணையம் உதவி வழங்கும் நாடுகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்.செப்.12

குடாநாட்டுமக்களை பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்ற வசதியாக ஏ-9 வீதியை திறக்கவும்-

சீருடையினரின் ஒத்துழைப்புடன் துணைப் படைகளினால் மேற்கொள்ளப்படும் நீதிக்கு புறம்பான கொலைகள், காணாமற்போதல் போன்றவற்றை உடனடியாக தடுத்து நிறுத்தவும் -

ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு யாழ். மறைமாவட்ட நீதி சமாதானத்துக்கான ஆணையம் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி ஆணையம் உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் இணைப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்:

அரசுக்கும்- விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தவும்- உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மனித உரிமை மீறல்களினால் பெருந் துயரில் மூழ்கியிருக்கும் குடாநாட்டு மக்கள்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் நேற்று ஊரடங்கு தளர்த்தப்படவில்லை

யாழ்ப்பாணம், செப். 12

தென்மராட்சிப் பகுதியில் நேற்று மீண்டும் முழுநேர ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.

யாழ். குடாநாட்டில் இரவு நேரத்தில் இராணுவத்தினரால் தொடர்ச்சியாக நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் ஊரடங்கு உத்தரவு பகல் வேளைகளில் வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் அண்மைய சில நாள்களாக காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை தளர்த்தப்பட்டு வருகின்றது. தென்மராட்சியில் இது மாறுபட்ட நேரமாக இருந்தபோதும் குறிப்பிட்ட அளவு நேரம் தளர்த்தப்பட்டு வந்தது.

கடந்த ஒரு வார காலத்தின் பின்னர்

(06 ஆம் பக்கம் பார்க்க)

# அரசுடன் ஒத்துழைக்க ரணில் இணக்கம்

# ஜனாதிபதியுடன் இரு மணிநேரம் பேச்சு!

## நாட்டின் ஸ்திர நிலைக்கு அமைதி முயற்சிகளே அவசியம் என்றும் வலியுறுத்து

கொழும்பு, செப்ரெம்பர் 12

**நாட்டின் ஸ்திரத்தன்மை, அமைதி முயற்சிகள் என்பவற்றினை நோக்கமாகக் கொண்டு - பொதுவான இணக்கப்பாட்டின் அடிப்படையில் - அரசுக்கு ஆதரவு அளிப்பதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இணங்கியிருக்கின்றது.**

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே நேற்று முன்னிரவு அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் முடிவில் இந்த இணக்கப்பாடு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

நேற்று மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணிவரை சுமார் இரண்டு மணிநேரம் ஜனாதிபதியுடன் நடைபெற்ற பேச்சுக்களில் ரணில் விக்கிரமசிங்கவுடன் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவும் கலந்துகொண்டார். ஜனாதிபதியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உடன் இருந்தார்.

பொதுவான இணக்கப்பாட்டின் அடிப்படையில் அரசும், எதிர்க்கட்சியும் இணைந்து செயற்படுவது தொடர்பாகத் தொடர்ந்து மேலும் பல சந்திப்புகளை மேற்கொள்வது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், ரணில் விக்கிரமசிங்கவும் இணங்கிக்கொண்டனர் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

நாட்டின் மோசமான பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாகவும் நேற்றைய சந்திப்பில் முக்கியமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது.

சமாதான முயற்சிகளுக்கு உடனடியாகப் புத்துயிர் அளித்து போர்நிறுத்த உடன்படிக்கை

(06 ஆம் பக்கம் பார்க்க)



அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது ஜனாதிபதியுடன் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜெயசூரிய, அமைச்சர் மைத்திரிபால சிறிசேன...

## பேசாலையில் கிளைமோர் மீட்பு

மன்னார் - தலைமன்னார் வீதி - பேசாலைப் பகுதியில் நேற்றுப்பிற்பகல் 2.30 மணியளவில் 10 கிலோகிராம் நிறையுடைய இரண்டு கிளைமோர் குண்டுகளை பொலிஸார் மீட்டிருக்கின்றனர். வீதிச் சோதனையில் ஈடுபடும் பொலிஸாரை இலக்கு வைத்தே இந்தக் கிளை மோர்க் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து அப்பகுதியில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால், பேசாலைப் பகுதியில் சுமார் ஒரு மணித்தியாலயம் போக்குவரத்துகள் தடைப் பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-03)

## மோதலை நிறுத்துவதற்கான செயல்திட்டம் இணைத் தலைமை பரிந்துரைக்கக் கூடும்?

பிரசெல்ஸ், செப்.12

இலங்கையில் அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெற்றுவரும் மோதல்களையும், வன்செயல்களையும் நிறுத்துவதற்கான செயற்றிட்டம் பற்றி இணைத்தலைமை நாடுகள் இன்று பிரசெல்ஸ் நகரில் கூடி விவாதிக்கவுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளை உள்ளடக்கிய - இலங்கைக்கு உதவி வழங்கும் - இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்வதற்காக இன்று கூடுகின்றனர்.

தற்போது தலையெடுத்திருக்கும் வன்செயல்களை நிறுத்தி போர்நிறுத்த உடன்படிக்கையையும் சமாதான முயற்சிகளையும் முன்னெடுப்பதற்குரிய செயல்வடிவதிட்டம் ஒன்றை இணைத் தலைமை நாடுகளின் இன்றைய மாநாடு நோர்வே ஊடாகப் பரிந்துரைக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக பிரசெல்ஸில் உள்ள சில ராஜதந்திர வட்டாரங்கள் நேற்றுத் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

போர் முயற்சிகள் மற்றும் வன்முறைகளில் ஈடுபடுவதில் இருந்து இரு தரப்பினரையும் ஒரு வழித் தடத்துக்குக் கொண்டுவந்து கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் நேற்று மோதல் நிலை தணிவு

கொழும்பு, செப். 12

"முகமாலைப் பகுதியில் நேற்று எதுவித மோதல்களும் இடம்பெறவில்லை. இருந்தும் புலிகள் பளை மற்றும் ஆனையிறவுப் பகுதிகளிலிருந்து அவ்வப்போது ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்."

- இவ்வாறு தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் நேற்றுத் தெரிவித்தது.

முகமாலையில் கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்ற மோதல்களில் 35 படையினர் உயிரிழந்துள்ளனர். 152 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, மோதல்களில் பலியான 12 புலி உறுப்பினர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் கொடிகாமம் பொலிஸ் நிலையத்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## மோதல்கள் விரைவில் முடிவுக்கு வரும் ஜப்பானின் புதிய தூதரின் நம்பிக்கை

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப்படைகளுக்கும் இடையிலான மோதல்கள் விரைவில் முடிவுக்கு வரும்.

- இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார் இலங்கைக்கான ஜப்பானின் புதிய தூதர் கியோஷி அராகி.

இலங்கைக்கான தூதர் பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:-

தற்போதைய மோதல்கள் நிறுத்தப்பட்டு சமாதான முயற்சிகள் இயன்ற அளவு விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும். நாட்டில் அரசியல் ஸ்திர நிலையும், பொருளாதார அபிவிருத்தியும் உருவாக வேண்டுமாயின் சமாதான முயற்சிகள் மீண்டும் விரைவாக தொடங்கப்படவேண்டும் - என்றார்.

கியோஷி அராகி இலங்கைக்கான 19ஆவது ஜப்பானியத் தூதர் ஆவார். 1952இல் இரு நாடுகளுக்கும் இடையே ராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டன. (ஜ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வவுனியாவில் ஞாயிறிரவும் 12 வீடுகளில் கொள்ளை

வவுனியா, செப். 12

வவுனியா மாரம்பைக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தமிழர்களின் 12 வீடுகள் ஆயுத முனையில் கொள்ளையிடப்பட்டுள்ளன.

ஆயுதங்களுடன் வந்த இனந்தெரியாதவர்கள் வீடுகளில் இருந்தவர்களை மிரட்டி கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று கூறப்பட்டது.

20 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டன எனப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கடந்த சிலமாதங்களாக வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் - குறிப்பாக தமிழர் வீடுகளில் ஆயுத முனையில் நகை, பணம் கொள்ளையிடப்படுவது தொடர் கதையாகிவிட்டது என்று வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

# தொழில்நுட்ப அலுவலர் நியமனம் 7 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 12

இலங்கைதொழில்நுட்பசேவையின் தொழில்நுட்ப அலுவலர் தரம் II 'ஆ' பிரிவிற்கு ஆள்ச்சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்திலிருந்து 7 பேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் நியமனம் வழங்குவதற்காக இந்த போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டிருந்தது என்றும் -

மேற்படி போட்டிப்பரீட்சைப் பெறுபேறுகளின்படி தகைமை பெற்றுள்ளவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் பொதுநிர்வாக அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என்றும் - அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், விவரம் வருமாறு:

ரி. சுரேஷ் (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி), ஈ. செல்வராசன் (செம்பியன்பற்று தெற்கு, தாளையடி), ஜெ. முத்துதம்பி (நீர்வேலி வடக்கு, நீர்வேலி), என்.எல்.வசந்தி (பிரதானவீதி, சுழிபுரம்), ரி. பிரதீஸ் (அண்ணாபவனம், கருகம்பானை வீதி, கீரிமலை), என்சஜிஸ்(முதலியார் மகேசன் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்), ஏ. தர்சினி (வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை).

மேற்படி நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றம்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் -

யாழ். மாவட்டத்துக்கான தபால் சேவை சீரின்மையால் இந்தத் தகவல் 'பக்ஸ்' மூலம் அனுப்பப்படுவதாகவும் - பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தமக்கு அறிவித்துள்ளார் என்றும் யாழ். அரச அதிபர் க. கணேஷ் தெரிவித்துள்ளார்.

## படுகொலைகள்

### துன்னாலையில்...

யாழ்ப்பாணம்,செப். 12

துன்னாலைலை தெற்கு, கொட்டுக்குளி, பிள்ளையார் வீதியில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த மயில்வாகனம் சசிதரன் (வயது - 24) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவருடன், பயணித்தவரான எஸ். உதயகுமார் (வயது - 25) என்பவர் காயங்[illegible]ரக்குள்ளானார். இவர் சிகிச்சைக்காக மந்திகை [illegible]த்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (173-70-202)

* * *

### இணுவிலில்....

யாழ்ப்பாணம்,செப். 12

இணுவில் தியேட்டர் ஒழுங்கையிலுள்ள புகையிரதப் பாதையில் வைத்து நேற்று அதிகாலை 5 மணியளவில் - ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் - இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வெள்ளைவானில், அந்த இளைஞரைக் கடத்திவந்த இனந்தெரியாதோர் குறிப்பிட்ட இடத்தில் வைத்து அவரைச் சுட்டுவிட்டுச் சென்றுவிட்டனர் என்று கூறப்பட்டது.

மல்லாகம் நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார். நேற்று பிற்பகல் வரை அடையாளம் காணப்படாத அந்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்த இளைஞர் கறுப்பு நிற நீளக்காற்சட்டை மட்டும் அணிந்திருந்தார் என்றும் -

சுமார் 30 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரது இடுப்பில் செம்பில் தயாரிக்கப்பட்ட இரண்டு தாயங்கள் காணப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (68-202)



பொதுநலவாய செயலாளர் நாயகம் டொன் மக்கினன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். இன்று கொழும்பில் ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய நாடுகளின் நிதியமைச்சர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக டொன் மக்கினன் இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரு தமிழ் யுவதிகள் உட்பட கண்டியில் அறுவர் கைதாகினர்

கண்டி, செப்டெம்பர் 12

கண்டி நகரில் நேற்று திடீரென மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இரு தமிழ் யுவதிகள் உட்பட அறுவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மத்திய பிரதேச பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தின் முன்பாக சந்தேகத்துக்கு இடமான நிலையில் நடமாடினார் என்று கூறப்படும் பொத்துவிலைச் சேர்ந்த ஓர் இளைஞரும் இதிலடங்குகிறார்.

இவர்களிடம் ஆள் அடையாள அட்டைகள் இருந்த போதிலும் கண்டியில் இவர்களைத் தெரிந்தோர் எவரும் இல்லை எனவும் பொலிஸாருக்கு இந்த தமிழ் இளைஞர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இதேவேளை,அரலகங்வில என்னும் இடத்தில் வசிக்கும் தமிழ் இளைஞர்கள் இரு வரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

(த-203)

# ஏப்ரல் மாதம் அமுலில் இருந்த விலைக்கு டீசல் தரக் கோருகின்றது பஸ் சங்கம்

கொழும்பு, செப்டெம்பர் 12

எரிபொருள் விலை அதிகரிப்பிற்கு ஏற்ப பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அரசு இடமளிக்காத பட்சத்தில் கடந்த ஏப்ரல் மாதத்தில் நிலவிய விலைப்படி (லீற்றர் 58 ரூபா) டீசலை அரசாங்கம் வழங்க வேண்டுமென இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை அரசுக்குத் தாங்கள் காலக்கெடு வழங்கியுள்ளனர் எனவும் கோரிக்கை நிறைவேறாத பட்சத்தில் 17ஆம் திகதி நள்ளிரவு முதல் தொடர் வேலைநிறுத்தமொன்று ஆரம்பிக்கப்படுமென்றும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்தார்.

கடந்த ஏப்ரலில் லீற்றர் 58 ரூபாவாக இருந்த டீசல் விலை பின்னர் மூன்று தடவை படிப்படியாக அதிகரித்து இப்போது ஏப்ரல் விலையைவிட ஒன்பது ரூபாவால் உயர்ந்துள்ளதாகக் குறிப்பிட்ட கெமுனு விஜேரட்ன, எவ்வாறாயினும் அதன் பின்னர் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லையென்று கூறி னார்.

பஸ் கட்டண அதிகரிப்பு குறித்து ஜனாதிபதியுடனும், போக்குவரத்து அமைச்சருடனும் நடத்திய தங்கள் பேச்சுகள் தோல்வியடைந்த தால் இவ்வாறான கோரிக்கையை அரசிடம் தாங்கள் முன்வைத்தனர் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-05)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி



(தலைவர் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம்- சுன்னாகம்)

கண்பார்வையற்றவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு அரும் பங்காற்றியவரும், விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் ஸ்தாபகரும், தலைவருமான செல்விஅன்னலட்சுமி சின்னத்தம்பி நேற்று (11.09.2006) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று (12.09.2006) செவ்வாய்க்கிழமை வாழ்வக இல்லத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சபாபதிப்பிள்ளை வீதி,*
*சுன்னாகம்.*

தகவல்:
**ஆ. இரவீந்திரன், [உபதலைவர் - வாழ்வகம்]**

### ஐயம்பிள்ளை சின்னப்பிள்ளை (சுந்தரம்)

தெல்லிப்பழை, தையிட்டிப்புலத்தை பிறப்பிடமாகக் கொண்ட ஐயம்பிள்ளை சின்னப்பிள்ளை 09.09.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் அன்புத் துணைவியும் மகேஸ்வரி, செல்வரட்ணம் (சுவிஸ்), காசிநாதன் (துரை - சுவிஸ்), பாலசிங்கம் (அமரர்) ஆகியோரின் பாசமிகு தாயும், சித்தி விநாயகம், கிருபாதேவி, சுமதி (சுவிஸ்), சுமன் (சுவிஸ்), விமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் கஜந்தன், யசிதா, சுஜிதா (சுவிஸ்), சுமன் (சுவிஸ்), சு[illegible]ஞ்சனா, சுஜந்தினி, நிமல்ராஜ், கஜந்தரூபி, நிசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த் தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.09.2006 ஞாயிற்றுக்கிழமை சிறுப்பிட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி தெற்கு,*

தகவல்:
*மகேஸ்வரி (மகள்)*

### திருமதி மங்கையர்க்கரசி நாகரத்தினம்



**(ஓய்வுபெற்ற ஆசிரியை- யா/புனித மரியாள் வித்தியாலயம்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 35, உபதிஸ்ஸ வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி நாகரத்தினம் நேற்று (11.09.2006) திங்கட்கிழமை இறைபதம் ஏய்தினார்.

அன்னார் ஆசைப்பிள்ளை நாகரத்தினம் DFO (மாவட்ட வன பரிபாலன அதிகாரி- வவுனியா - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆ.கணபதிநாதன் (ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதவான்) - நவமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை - பத்தினிதேவி தம்பதியரின் மருமகளும், க. சுபோஜினி, இராஜினி, சஞ்சீவன் (ஜேர்மனி), கோகுலன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் கமலதாசனின் (இத்தாலி) மாமியும் தேவநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/ மத்திய கல்லூரி - (இந்தியா), திலகவதி D.A.I.M. (ஜேர்மனி), புனிதவதி (யா/ ஆணைக் கோட்டை, றோ.க.த.க. பாடசாலை), காலஞ்சென்ற சபாநாதன் (ஜேர்மனி), ஜோதீஸ்வரி (முன்னாள் ஆசிரியை - யா/ புனித மரியாள் வித்தியாலயம்), இரவீந்திரநாதன் (ஜேர்மனி), ஜெயநாதன் B.O.C.(கனடா), மோகனநாதன் B.E. (லண்டன்) ஆகியோரின் பாசமிகுசகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.09.2006) செவ்வாய்க்கிழமை பொரளை ஜெயரத்தின மலர்ச்சாலையில் முற்பகல் 8.30 முதல் பிற்பகல் 5 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் பொரளை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*49, கச்சேரி நல்லூர் வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 021 222 9057 (யாழ்.)*
*0112 596738. (கொழும்பு).*

தகவல்:
நவமணி (தாயார்),
ஜோதீஸ்வரி பத்மநாதன்,
புனிதவதி குமாரசிவநாதன்
(சகோதரிகள்).

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை **செல்வி ச. துஷ்யந்தி** அவர்களின் பாசமிகு தந்தை

**சி. சந்திரகுலம்**

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழந்த துயர் உறுவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்.
புத்தூர்.

**ஆசிரியர் கழகம்.**

## முதலாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

அன்னை மடியில் 27 - 05 - 1923



ஆண்டவன் அடியில் 22 - 09 - 2005

திதி: 12.09.2006 (பஞ்சமி)

### திருமதி செல்லையா இலட்சுமி

**கண் இமைக்கும் பொழுதினிலே காலன் அவன்**
**காற்றாய்க் கொண்டு சென்றதென்ன?**
**பன்னிரண்டு மாதங்கள் பட்டென்று போனதென்ன?**
**பாசமாய் இருந்து எம்மையெல்லாம் பரிதவிக்கவிட்டு**
**மின்னலாய் நீங்கள் வானகம் சென்றதென்ன?**

*உங்கள் ஆத்மா சந்தியடைய பிரார்த்திக்கும்*

*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*

அன்பு அகலா:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**NEW SCIENCE HALL**
*யாழ்ப்பாணம்.*

**DAY CLASS**
(திங்கள் தொடக்கம் வெள்ளி வரை)
**காலை 7.30 - 11.30**
**நடைபெறுகின்றன.**

**PAPER CLASSES**
2008, 2007 A/L
பி.ப 2.30 - 4.00
நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரஞ்சு தொண்டு நிறுவன ஊழியர்கள் கொலை:

# இருவரின் சடலங்களை தோண்டி எடுத்து இரசாயனப் பகுப்பாய்வு செய்ய ஏற்பாடு

கொழும்பு,செப்.12

மூதூரில் இடம்பெற்ற பிரெஞ்சுத் தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேரின் படுகொலைகளுக்கு காரணமாயிருந்த சக்தியை இனங்காணும் பொருட்டு, புதைக்கப்பட்ட சடலங்களில் இரண்டை தோண்டி எடுத்து ப்ோர்ஸனிக் இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதற்கு வேண்டிய வழிமுறை நடைமுறைகள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன் பூர்த்தியாகிவிடும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நம்பிக்கையோடு எதிர் பார்த்திருக்கின்றனர்.

மரணச் சடங்குகளின் பின்னர் புதைக்கப்பட்ட சடலங்களை தோண்டி எடுத்து இரசாயன மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு கொலை செய்யப்பட்ட ஊழியர்கள் இருவரின் பெற்றோரைத் தவிர ஏனையோர் மறுத்துவிட்டனர்.

கொலைச் சம்பவங்கள் மூதூர் நீதிபரிபாலன எல்லைக்குள் நடந்திருந்தாலும், கொலைகள் தொடர்பான விசாரணைகள் அநுராதபுர. நீதிமன்றத்துக்கே நீதி சேவை ஆணைக் குழுவால் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

நீதிமன்ற அமர்வுகளை மூதூரில் நடத்துவதற்கான சூழ்நிலை அங்கு இல்லாத காரணத்தால் மூதூர் நீதிவான் கந்தளாய் நீதிமன்ற வளாகத்திலேயே நீதிமன்ற அலுவல்களை இருந்து கவனித்து வருகிறார். இதனாலேயே இக்கொலை தொடர்பான விசாரணைகள் அநுராதபுரத்துக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளன என்று மனித உரிமைகளுக்கான அனைத்து அமைச்சுக்கள் குழுவின் செயலாளரான நீதி அமைச்சு செயலாளர் சுஷரித ஹம்லத் தெரிவித்திருக்கிறார்.

சடலங்கள் மீது போர்ஸனிக் இரசாயன பகுப்பாய்வு பரிசோதனைக்கு உதவும் பொருட்டு அவுஸ்திரேலிய போர்ஸனிக் நிபுணர் ஒருவர் இங்கு விசேடமாக வந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சடலத்தைத் தோண்டி எடுத்து விசாரணைக்கு ஒப்படைப்பதற்கான முடிவு இந்த வாரத்துக்குள் எடுக்கபடுமென்று சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த ஜசந்தா மீகாதகொட தெரிவித்தார். இந்த விசாரணைகளை இவரே கவனித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இடம்பெயர்ந்து பதிவு செய்தவர்களுக்கு பருத்தித்துறையில் நிவாரணம் வழங்கப்படுகிறது

பருத்தித்துறை.செப்.12

பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெயர்ந்தவர்களில் பதிவு செய்யப்பட்டவர்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருவதாக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பிரதேச செயலக பிரிவில் இதுவரை 244 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளதாகவும் இவர்களுக்கான இலவச நிவாரணப்பொருள்கள் ப.நோ.கூ.சங்கக் கிளைகளின் ஊடாக வழங்கப்பட்டு வருவதாகவும் பிரதேச செயலர் தெரிவித்தார். இக்குடும்பங்களுக்கான உணவு அல்லாத அத்தியாவசியப் பொருள்களை வழங்கும் முகமாக தான் யு.என்.எச்.சீ.ஆர் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ப-ரி)

# ஆசிரிய கற்கைநெறி முடித்தவர்களுக்கு நியமனத்துக்கான நேர்முகப்பரீட்சை

## 17 பேரில் 6 பேர் மட்டுமே வந்திருந்தனர்

நல்லூர்,செப்.12

கல்வியியற்கல்லூரியில் ஆசிரியர்களுக்கான கற்கை நெறியைப் பூர்த்தி செய்து கொண்டவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவது தொடர்பான நேர்முகப்பரீட்சைகள் நேற்று திங்கட்கிழமை காலை யாழ். கல்வி வலயக் கல்விப்பணிமனையில் வலயக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் அங்கு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க முடியாதிருக்கும் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த 17 பேர்களுக்கான நேர்முகப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு அறிவித்திருந்ததைத் தொடர்ந்து குறிப்பிட்ட நேர்முகப்பரீட்சை இங்கு நடைபெற்றதாகக் கூறப்பட்டது.

17 பேரின் விவரங்கள் அறிவிக்கப்பட்ட போதும் நேர்முகப்பரீட்சைக்கு 6 பேர் மட்டுமே சமுகமளித்ததாக வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வரத்தினம் மேலும் தெரிவித்தார். (ப-111)

# கிருஷ்ண ஜெயந்தி

யாழ்ப்பாணம்.செப்.12

வண்ணை வெங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலய கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நாளை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிமுதல் வேணுகோபாலசுவாமிக்கு அஷ்டோத்திர கலச கங்காபிஷேகம், விசேட தீபாராதனை என்பன நடைபெற்று சுவாமி வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளுவார்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு ஜனனபூசை, தாலாட்டு என்பன இடம்பெறும்.

தொடர்ந்து 9 மணிக்கு வசந்தமண்டபப்பூசை இடம்பெற்று சுவாமி வீதியுலாவருவார். உறியடி உற்சவமும் இடம்பெறும். (23)

# காணாமற்போகும் கால்நடைகள்

பருத்தித்துறை.செப்.12

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியிலும் அதனை அண்டிய கிராமங்களிலும் பல கால்நடைகள் காணாமல் போவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையாலும் ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மக்கள் வெளியில் திரிவதில் அச்சம் கொண்டுள்ள நிலையில் பல கால்நடைகள் திருடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. இதுவரையில் சுமார் முப்பது கால்நடைகள் வரை காணாமல் போயுள்ளதாகவும் இப்பிரதேச கிராம சேவையாளர்களுக்கு மக்கள் முறைப்பாடுகளை தெரிவித்துள்ளனர். தற்போதைய சூழ்நிலை காரணமாக நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியாது உள்ளதாக கிராம சேவையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ப-ரி)

# சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ந்து நடக்கிறது

நாயன்மார்கட்டு செம்மணிப் பிரதேச வயல் நிலங்களில் தொடர்ந்தும் சட்டவிரோதமாக மண் அகழும் சம்பவங்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வயல் நிலங்களில் மண் அகழ வேண்டாம் எனத் தடுக்கும் உரிமையாளர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வயல் நிலங்களில் விவசாய செயற்பாடுகள் மேற்கொள்ள முடியாதிருப்பதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். (ப-111)


உ
ஸ்ரீராம ஜெயம்



பொன்னாலை
**ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான**
**2006ஆம் ஆண்டு விய வருஷ ஆவணி மாத**
**திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம்**

பகல் 1008 சங்காபிஷேக சயன உற்சவம்

வேட்டைத் திருவிழா - ஆவணி மீ 27ஆம் நாள்(12.09.2006) செவ்வாய்க்கிழமை
தேர்திருவிழா - ஆவணி மீ 28ஆம் நாள்(13.09.2006) புதன்கிழமை அதிகாலை
1008 சங்காபிஷேகம், பூஜை, வசந்தமண்டப பூஜை காலை 9.45 மணி தேரில் எழுந்தருளல், முற்பகல் 11.30 மணிக்கு உறியடி உஞ்சவம் பகல் ஒரு மணி கிருஷ்ண ஜெயந்தி இரவு 11 மணி ஸ்ஞபனாபிஷேகம் பூஜை உற்சவம், தாலாட்டு, பஜனை என்பன நிகழும்
தீர்த்தத் திருவிழா - ஆவணி மீ 29ஆம் நாள்(14.09.2006) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு
திருக்கல்யாணம் சங்காபிஷேகம் - ஆவணி மீ 30ஆம் நாள் (15.09.2006) வெள்ளிக்கிழமை

*அனைவரும் வருக! நாராயணன் அருள் பெறுக!!*
கோவிந்த நாம சங்கீர்த்தனம்! கோவிந்தா!! கோவிந்தா!!!

*பொன்னாலை,*
*சுழிபுரம்.* (53653) தேவஸ்தான பரிபாலன சபை.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 16 - 10 - 1952
இறப்பு 04 - 09 - 2004

## அமரர் அ.யோகானந்தா

(B.Sc.(Cey) Dip. in Education)
Assitant Director of Education maths, Thenmaradchi)

ஆண்டிரண்டு உருண்டோடியதையா
கண்டதெல்லாம் கனவாகிப் போனதையா
வையகமியங்குவது பௌதிகத்திலென்பீர் - அந்த
வையகத்திற்கே பெருமை பௌதிகமையா - அந்த
பௌதிகத்திற்கே சிறப்பு உம் அறிவுதானையா
மலைபோல் உருவம் கொண்டீர்
மலைத்திடும் அறிவுடையீர்
ஞாலத்தை விட்டகலினும்
காலத்தை வென்றவர் ஐயா

*90, செட்டித்தெரு,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (53649)

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, மகன்மார்,
மருமகள், பேரன், பேர்த்தி


**NEW SCIENCE COLLEGE**
அலைகளும் அதிர்வுகளும்
Sat, Sun 7.00-8.00(a.m)
By:M.கருணாநிதி
ஏனைய வகுப்புகள் வழமை போல்


## தவறிவிட்டது

மஞ்சத்தடி., இணுவில் கிழக்கைச் சேர்ந்த கண்ணதாசன் ரஜீவன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும்(890480152V) மாணவர் அடையாள அட்டையும் 08.09.2006 அன்று இணுவிலில் மஞ்சத்தடிக்கும் இணுவில் அங்கலப்பாயுக்கு மிடையில் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

கிராம சேவையாளர் பிரிவு J/115 மஞ்சத்தடி, இணுவில். அல்லது தர்மலிங்கம் மில், அங்கலப்பாய், இணுவில் கிழக்கு.


## விற்பனைக்கு

Greatdane பெரிய நாய்கள், நாய்கூடுகள், Laptop -P-IV, Aircooler, Speakerset, Amplifier, Cd Set, Washing Machine, Carrom board, Single and Trible bed, Table, Gascooker and Cylinder, Roadmaster motor Byke, 32" TV, Fridge, Light [illegible]
Pragash, 95 Palaly Road (இலுப்பையடிச் சந்தி அருகில்) Jaffna.


# மரண அறிவித்தல்கள்

## சிவா கதிரமலை கவீஸ்வரன்



கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட சிவா கதிரமலை கவீஸ்வரன் (08.9.2006) வெள்ளிக்கிழமை சுவிஸில் அகாலமரணமானார்.

அன்னார் சமாதான நீதிவான் சிவா கதிரமலை - தவமணி (ஓய்வுபெற்ற உப அதிபர்) தம்பதியினரின் அன்பு மகனும், சியாங்கி (சுவிஸ்) அவர்களின் அன்புக்கணவரும், செரோன் (சுவிஸ்), சகான்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மதீஸ்வரி, (தங்கா - பிரான்ஸ்), சுதாஈஸ்வரன் (இந்தியா), காலஞ்சென்ற துஷாஈஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவீந்திரனின் (பிரான்ஸ்) அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*187, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (53652)

தகவல்
த.விஜயகாந்தன்
(சகோதரன்).

## திருமதி சீனி கண்ணகை



பார்மணியம் வீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தென்னிந்தியத் திருச்சபை அருகில் ஏழாலை தெற்கு சுன்னாகத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சீனி கண்ணகை அவர்கள் நேற்று (11.09.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனி(சிமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் பாலலேந்திரா (நில அளவையாளர் அனுராதபுரம்), யோகேந்திரா (விநியோக உத்தியோகத்தர், லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் தாயும் தவமலர், பிறேமவசந்தி ஆகியோரின் அன்பு மாமியும் பத்மசீலன்(திட்டப் பொறியியலாளர், நீர் வடிகாலமைப்பு சபை, அம்பாறை) கோபிநாத், காயத்திரி(யூனியன் கல்லூரி மாணவர்கள்), கார்த்திகா(மகாஜனக் கல்லூரி மாணவி) ஆகியோரின் பேர்த்தியும் நாகமுத்து.மாசிலாமணி(CTB டிப்போ முன்னாள் முகாமையாளர்) ஆகியோரின் அன்புச் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.09.2006) செவ்வாய்க்கிழமை அரவது தற்காலிக இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணிக்கு சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விழிசிட்டி,*
*தென்னிந்தியத் திருச்சபை*
*அருகில்,*
*ஏழாலை தெற்கு சுன்னாகம்.* (53659)

தகவல்
குடும்பத்தினர்

## திருமதி தம்பிஐயா ஆச்சிப்பிள்ளை

சரசாலையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிஐயா ஆச்சிப்பிள்ளை 11.09.2006 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி தம்பிஐயாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா முருகேசு(சரசாலை) அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ச.செல்லக்கண்டு(அளவெட்டி) மற்றும் ச.சிவலிங்கம்(நல்லூர்), காலஞ்சென்ற சு.லட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் தவராசா (இளைப்பாறிய பாடசாலை அதிபர், நீர்கொழும்பு, கொச்சிக்கடை), செல்வராசா(பிரான்ஸ்), மனோன்மணி, சிவராசா(இளைப்பாறிய தபால் அதிபர், யாழ்ப்பாணம்), யோகராசா(தொழில் உத்தியோகத்தர் கொழும்பு), துரைராசா(லண்டன்), சற்குணராசா(பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தாயும் எலிசபெத்(இளைப்பாறிய பாடசாலை அதிபர்), நகுலாதேவி(பிரான்ஸ்), நவரத்தினம்(இளைப்பாறிய விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர், யாழ்ப்பாணம்), புஸ்பராணி (கொழும்பு), மஞ்சுளாதேவி(பிரான்ஸ்), பாலநாயகி(கொழும்பு), ஜெயவதனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (12.09.2006) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*66/31, மூத்தவிநாயகர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
**T.P.021 2227210** (53657)

தகவல்:
கி.நவரத்தினம்
(மருமகன் - நல்லூர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரி ஓம் நாராயணாய நம



# அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

04.09.2006 - 15-09-2006

இரதமே லேறி இனிதருள் புரியும்
சரதனே ராமா சாரங்க பாணி
பரதநா டகனே பழம்புகழ் நாகேஸ்
வரமுறை நாக வரதநா ரணனே. - [அருட்கவி]

### தேர்த்திருவிழா (13-09-2006 புதன்கிழமை)

கலச சங்காபிஷேகம் காலை 6.00 மணி
வசந்த மண்டபப் பூசை மு.ப. 9.30 மணி
தேர் மு.ப.11.00 மணி
உறியடி பி.ப. 4.30 மணி

அன்று அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் இயற்றிய பிரார்த்தனைப் பாடல்கள் எனும் நூல் வெளியீட்டு விழாவும் இடம்பெறும்.

### தீர்த்தோற்சவம் (14-09-2006 வியாழக்கிழமை)

ஸ்ரீரங்கநாதர் பாதபூசை மு.ப. 9.00 மணி
தீர்த்தம் மு.ப. 11.00 மணி

### திருக்கல்யாணம் (15-09-2006 வெள்ளிக்கிழமை)

கல்யாண ஆரம்பம் பி.ப. 2.00 மணி

அன்பர்கள் அனைவரும் வந்து தரிசனை செய்து நாகவரத நாராயணரின் திருவருளால் சுகவாழ்வு பெறுமாறு வேண்டுகின்றோம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ ராம ஜெயம்

யாழ் - வண்ணை

# ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி உற்சவம்

**(13.09.2006 புதன்கிழமை)**

கண்ணன் அடியார்களே!

உலகோர் உய்ய பகவத் கீதையை அருளியவனும், ஆபத்பாந்தவனும், அநாதரஷகனுமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானின் ஜயந்தி தினமான மங்களம் மிகு விய வருஷம் ஆவணிமாதம் 28ஆம் நாள் (13.09.2006) புதன்கிழமை காலை 8 மணி முதல் ஸ்ரீ வேணுகோபால சுவாமிக்கு அஷ்டோத்த கலச (108) சங்காபிஷேகமும் தொடர்ந்து விசேட தீபாராதனையும் நடைபெற்று சுவாமி வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளுவார்.

ஆவணி மாதம் 29ஆம் நாள் (14.09.2006) வியாழக்கிழமை காலை 7 மணி ஜனன பூஜை, தாலாட்டு

பிற்பாடு அடியார்களுக்கு கிருஷ்ண ஜெயந்தி காயம் வழங்கப்படும்

காலை 8.30 மணி காலை சந்தி பூஜை

காலை 9 மணி வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வலம் வந்து உறியடி உற்சவம் நிகழும்.

அடியார்கள் அபிஷேக, பூஜா, ஹோம திரவியங்களை உபகரித்து விழாக்களில் கலந்து ஸ்ரீ கிருஷ்ண பகவானின் கருணையால் ஸ்ரீ லஷ்மி விலாஸ சம்பன்னராக வாழ்வீர்களாக!

*கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர் எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே*

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

ஆதீன மஹா சபை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்,
வண்ணை. தொ.பே. 021 222 2476

### செட்டிக்குளம் இளைஞர் தெல்தெனியாவில் கைது

வத்துகாமம், செப். 12
வவுனியா செட்டிக்குளத்தைச் சேர்ந்த ரெங்கசாமி சத்திய ராஜா தெல்தெனியா பொலிஸார் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.



உ
சிவமயம்

# அந்தியேட்டி அழைப்பு

எமது பாசத்திற்குரிய குடும்பத் தலைவர்

## அமரர் கந்தையா குலசிங்கம்

(முன்னாள் இ.போ.ச. சாரதி) அவர்கள்

இறைபதம் அடைந்த 31ஆம் நாளான இன்று (12.09.2006) செவ்வாய்க்கிழமை காலை வில்லூன்றித் தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், 14.09.2006 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பூசையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அவரது ஆன்ம ஈடேற்றத்திற்கு தங்களது பங்களிப்பினை வழங்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

32, செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

# 11ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் மழலையாய் 12.06.1979

விண்ணில் தெய்வமாய் 12.09.1995

## செல்வன் சிறிஸ்கந்தராஜா றமேஷ்குமார்

[யாழ். யூனியன் கல்லூரி ஆண்டு 11 மாணவன்]

ஆண்டுகள் பதினொன்று ஓடின
ஆனால் உன் நினைவலைகள்
அணையா தீபமாய் விளங்குது
தப்பாத புன்முறுவல் தவழுகின்ற
உன் முகத்தை எப்போது காண்போம் இனி!

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்:
- குடும்பத்தினர்.

# நீங்காத நினைவலையில் ஈராண்டு

தோற்றம்
03
*
03
*
1908



மறைவு
12
*
09
*
2004

## அமரர் வேலணையூர் அம்பலவாணர் செல்லையா

(முன்னாள் அதிபர், வேலணை சரஸ்வதி வித்தியாலயம்,
முன்னாள் கிராமசபைத் தலைவர் - வேலணை)

திதி : சதுர்த்தசி 22.08.2006

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
அன்பின் இருப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய், அறிவூட்டும் ஆசானாய்
சமூகத்தின் அறிவொளியாய், பல்லோரும் போற்றும் பண்பாளனாய்
பாரினிலே வாழ்ந்து வழிகாட்டிய தெய்வமே!
தாங்கள் இறையடி சேர்ந்து ஈராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
இராச மகால்,
வேலணை கிழக்கு,
வேலணை.

தற்காலிக முகவரி:
10/1, வெவசெற் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

## ஐந்தாம் ஆண்டு

மலர்வு: 27.12.1922



உதிர்வு: 07.09.2001

### அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

பிரபல வர்த்தகர், மானிப்பாய் (V.S.K)

திதி: பஞ்சமி 12.09.2006 செவ்வாய்க்கிழமை

## நான்காம் ஆண்டு

மலர்வு: 10.02.1933



உதிர்வு: 28.12.2002

### திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி

(பவளம்)

திதி: தசமி 13.01.2007 சனிக்கிழமை

ஆண்டு ஐந்தாகியும் நினைவகலா நின் தோற்றம்
கண்ணுக்குள் நின்றாடி கனவுகளில் தோற்றி எங்கள்
எண்ணத்தில் வாழ்கின்றீர்கள் எந்நாளும் - எப்பொழுதும்
மண்ணுலகில் மாண்பு பெற்றீர் நாம் மகிழ்ந்திருந்த வேளையதில்
விண்ணுலகில் சாந்தி பெற விரைந்திட்டீர்கள் எம்மைவிட்டு
வேதனையை அடக்கி வேண்டுகின்றோம் மானிப்பாய்
வேற்கை முருகனின் பாதார விந்தங்களில்

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

[illegible]
வோட்டன் வீதி, மானிப்பாய்.

நித்தம் நினைவுகூரும்
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## புஷ்ஷின் புனை கதைகள் அம்பலம்

உலகை ஆட்டிப் படைக்கும் தனது சர்வாதிகாரத் திட்டத்தின் அடிப்படையில் சர்வதேச பொலிஸ்காரனான அமெரிக்கா புரிந்த திருகுதாளங்கள் மெல்ல மெல்ல அம்பலத்துக்கு வரத் தொடங்கியிருக்கின்றன.

அமைதிப் பூங்காவாக இல்லாவிட்டாலும் பெரும் யுத்த, ரணகளப் பீதி இல்லாமல் தன்பாட்டில் இருந்த ஈராக்கை அதன் எண்ணெய் வளத்துக்காகவும், தனக்கு அடங்கிப் போக மறுத்த அதன் ஆட்சி அதிகாரத்தின் முதுகை உடைக்கவும், அப்பிராந்தியத்தில் தனது அதிகார மிடுக்குச் செல்வாக்கை நிலைநிறுத்தவும் பலவந்தமாக அந்தத் தேசத்தை ஆக்கிரமித்து, அதனை உலகப் பேரழிவு மையமாக மாற்றியிருக்கிறது அமெரிக்கா.

அங்கு தினசரி தற்கொலைத் தாக்குதல்கள், குண்டு வெடிப்புகள், மோதல்கள், கண்ணிவெடிகள் என்று அரங்கேறும் வன்முறைகளால் சராசரி இருபது, முப்பது உயிர்கள் அவமே காவு கொள்ளப்படுகின்றன. இவ்வாறு பரிதாபமாக உயிரிழப்பவர்களில் பெரும்பான்மையானோர் ஒன்றுமறியாத அப்பாவிப் பொதுமக்கள். அல்லது வாய்க்கு - வழிக்கு - வசதியின்றி ஏதேனும் தொழில் தேடிச் சென்றவர்கள்.

எண்ணெய் வளம் செறிந்து - சொரிந்து - கிடக்கும் ஒரு மண்ணின் மைந்தர்கள் இவ்வாறு ஒரு நேர உணவுக்கு அவலப்படும் கோரமான அரசியல் நிலைமையை அங்கு வெற்றிகரமாக உருவாக்கி விட்டு, அந்த மக்களுக்கு ஜனநாயகம், சுதந்திரம், விடுதலை எல்லாம் பெற்றுத் தந்து விட்டோம் என்று வெட்கமின்றி மார்தட்டுகின்றது சர்வதேச வல்லரசான அமெரிக்கா.

ஐக்கிய நாடுகள் சபை தொடக்கம் உலகின் பெரும்பாலான நாடுகளும், அவற்றின் தலைவர்களும் ஒட்டுமொத்தமாக ஒரே குரலில் எதிர்க்க -

ஐ.நாவின் தீர்மானத்தைக் கூடப் பெறுவதற்கு முயலாமல்-

தன்பாட்டில் தனது நேச நாடுகளின் ஆதரவுடன் ஈராக்குக்குள் கால்வைத்து, தனது ஆக்கிரமிப்பை ஆரம்பித்தது அமெரிக்கா.

இன்று ஆப்பிழுத்த குரங்காக அதை விட்டு நீங்கவும் முடியாமல், அங்கு நிலைகொண்டபடி உள்ளூர் சுதேசிகளின் கடும் எதிர்ப்பை எதிர்கொள்ளவும் முடியாமல் தவிக்கின்றன. உலக வல்லரசும், அதை நம்பி ஈராக்கிற்குள் கால்வைத்த நேச அணிகளும்.

ஈராக்கை ஆக்கிரமிக்கும் தனது பலாத்கார நடவடிக்கைக்கு அமெரிக்காவின் புஷ் நிர்வாகம் முன்வைத்த முக்கிய காரணங்கள் இரண்டு.

ஒன்று - 'மனித குலத்துக்கே பேரழிவு தரும் ஆயுதங்களை ஈராக்கின் சதாம் நிர்வாகம் தயாரிக்கும் நிலையில் இருக்கிறது. அதற்கு அனுமதித்தால் உலகுக்குப் பேராபத்தாகி விடும். எனவே, ஆக்கிரமிப்பு நடவடிக்கை மூலம் அதை முளையில் கிள்ளிவிட வேண்டிய வேளை எழுந்துள்ளது.'

அடுத்தது - 'இஸ்லாமிய அடிப்படைத் தீவிரவாத அமைப்பான அல் - குவைதாவுடன் சதாமின் நிர்வாகம் தொடர்புகளை வைத்திருக்கின்றது. எனவே, பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் யுத்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக சதாம் ஆட்சியை அடக்குவது அமெரிக்காவின் பொறுப்பாகின்றது.'

இவையே, ஈராக் ஆக்கிரமிப்புக்கு முன்பதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் கூறிவந்த நியாயங்கள்.

ஆனால், இரண்டுமே அப்பட்டமான புனைகதைகள் - அந்த இரண்டு குற்றச்சாட்டுகளுமே ஆதாரமற்ற பொய்கள் - என்பது இப்போது நிரூபணமாகியிருக்கின்றன.

ஈராக்கைப் பேரழிவுக்கு உள்ளாக்கி அமெரிக்கப்படைகள் கைப் பற்றிய பின்னர், மனிதப் பேரழிவை ஏற்படுத்தக் கூடிய பயங்கர ஆயுதங்கள் தயாரிக்கப்படுவதற்கான சாத்தியம் ஏதும் அங்கு இருந்ததா என்பதைக் கண்டு பிடிக்க அமெரிக்கப் படைகளும், பன்னாட்டுப் படைகளும் சல்லடை போட்டுத் தேடின. அதன் விளைவாக, ஈராக்கைத் தாங்கள் பேரழிவுக்கு உள்ளாக்கியதைத் தவிர அங்கு அத்தகைய பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களின் தயாரிப்பு ஏதும் இடம்பெறவேயில்லை என்ற உண்மையை ஒப்புக் கொள்ள வேண் டிய நிலைமை வல்லாதிக்கத் தரப்புக்கு ஏற்பட்டது.

அதுபோல, சதாம் நிர்வாகம் அல் - குவைதா அமைப்புடன் தொடர்பு வைத்திருந்தது என்ற குற்றச்சாட்டும் வெறும் புனைகதை - கற்பனைக் கருத்து - என்பதும் இப்போது நிரூபணமாகியிருக்கின்றது.

அமெரிக்க செனட்டின் உளவுப் பிரிவுக் குழு நடத்திய விரிவான விசாரணைகளின் பின்னர், ஈராக் ஆட்சியாளர் சதாம் ஹுசைன், அல் - குவைதாவுடன் எந்தத் தொடர்புமே வைத்திருக்கவில்லை என்பது வெட்ட வெளிச்சமாகியிருக்கின்றது.

உண்மையில் சதாமின் ஆட்சியைக் கவிழ்க்கிறோம் என்ற பெய ரில் அமெரிக்காவும், அதன் நேச அணிகளும் ஈராக்கில் ஏற்படுத்திய பேரழிவு நாசமே அங்கு இப்போது அல் - குவைதா தீவிரவாதிகள் காலூன்றவும், அமெரிக்கா மற்றும் நேசப்படைகளுக்கு எதிராகத் தீவிரவாதத் தாக்குதல்களை அவர்கள் நடத்தவும் களம் அமைத்துக் கொடுத்திருக்கின்றது. அதுதான் உண்மை.

பேரழிவு தரும் ஆயுதங்களை அழிக்கவும், அல் - குவைதா தீவிர வாதத் தொடர்பைக் கருவறுக்கவும் ஈராக் மீதான நடவடிக்கை என்றார் ஜனாதிபதி புஷ்.

ஆனால், அவரது ஈராக் ஆக்கிரமிப்பால் அந்நாடே பேரழிவுக்குள்ளானது; அல் - குவைதா அங்கு கருக்கட்டி உருவெடுத்தது.

எவற்றைத் தடுப்பதற்காக ஈராக்கைக் கைப்பற்றப் போகின்றோம் என்று ஜனாதிபதி புஷ் அறிவித்தாரோ, ஈராக்கில் இல்லாத அந்த விடயங்கள் இப்போது புஷ்ஷின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையால்தான் அங்கு புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன.

சதாம் ஆட்சியை, நீதியான காரணமின்றி கவிழ்த்தமைக்காக மட்டுமன்றி -

ஈராக்கைப் பேரழிவுக்கு உட்படுத்தி, மீள முடியாத உள்நாட்டு யுத்தத்துக்குள்ளும், நிரந்தர அவலத்துக்குள்ளும் ஆழ்த்தியமைக்காக மட்டுமன்றி -

அந்த மண்ணில் தினசரி பல டசின் கணக்கானோர் என்ற ரீதியில் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கானோர் கோரமாகக் கொல்லப்படும் அரசியல் சூழ்நிலையை அங்கு ஏற்படுத்தியமைக்காக மட்டுமன்றி -

இதுவரை இல்லா இஸ்லாமிய அடிப்படை வாதப் போக்குடைய அல் - குவைதா தீவிரவாதத்தை ஈராக் மண்ணில் ஊன்றி வளர்க்கச் செய்வதற்கான களநிலைமையைத் தனது பொறுப்பற்ற - எதேச்சாதிகார - நடவடிக்கைகள் மூலம் ஏற்படுத்தியமைக்காகவும் -

அமெரிக்க மற்றும் நேசப்படைகள் கண்டிக்கப்படவும், தண்டிக்கப்படவும் வேண்டும்.

அது நடக்குமா, சாத்தியமா என்பதெல்லாம் வேறு விடயம். ஆனால், அதுதான் நியாயம். இயற்கை நீதி.

# கடந்த டிசெம்பர் மாதம் முதல் யாழில் 419 பேரை காணவில்லை எனப் புகார்!

## மனித உரிமைகள் ஆணைக்குழு அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, செப். 11

கடந்த வருடம் டிசெம்பர் முதல் இதுவரை யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணாமற் போனவர்கள் தொடர்பில் 419 முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் தர்மசிறி ஜயவிக்கிரம தெரிவித்திருக்கிறார்.

பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசிய'விற்கு அளித்த பேட்டியொன்றில் மேற்கண்டவாறு கூறிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணாமற்போனவர்கள் குறித்தான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காணமற்போனமை குறித்தான 60 முறைப்பாடுகளில் படையினருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதுவரை பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களில் 54 பேர் விடுவிக்கப் பட்டுள்ளனர். 23 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

காணாமற் போயிருக்கும் ஏனையவர்கள் குறித்தான விவரங்கள் கிடைக்காத போதிலும் அவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கொழும்பில் காணாமற்போனவர்கள் குறித்து 30 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை பற்றியும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன'' என்றார் அவர்.

இதேவேளை, கடந்த மாதம் மட்டும் யாழ்ப்பாணத்தில் 67 பேர் காணாமல் போயுள்ளனர் என்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (த)

## யாழ். குடாநாட்டில் கடந்த மாதம் மட்டும் 67 பேர் காணாமற்போனதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.12

கடந்த மாதம் மட்டும் யாழ்ப்பாணத்தில் 67 பேர் காணாமல்போயுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 31ஆம் திகதிவரையான காலப்பகுதியில் இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி 67 முறைப்பாடுகளில் 14 முறைப்பாடுகள் இல்லாமல் செய்யப் பட்டுள்ளன என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம். ஏனையவர்களில் 3 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது என்று மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பாகவும் கடந்த மாதம் 76 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும்-

இவர்களுள் 24பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என்றும் - ஆணைக் குழு அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர். (202)

## வாழ்வக ஸ்தாபகர் செல்வி சின்னத்தம்பி காலமானார்

யாழ்ப்பாணம்,செப்.12

சுன்னாகத்தில் இயங்கும் விழிப்புலவனுவிழந்தோர் வாழ்வகத்தின் தலைவரும் ஸ்தாபகருமான செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி நேற்றுக் காலமானார்.

கடந்த சனிக்கிழமை மாரடைப்பால் பீடிக்கப்பட்ட அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

அவரின் சடலம் வாழ்வாகத்தில் மக்கள் அஞ்சலிக்காக இன்று வைக்கப் பட்டிருக்கும்.

விழிப்புலனற்றோரின் மறுவாழ்வுக்காக வாழ்வகம் ஒன்றை அமைப்பதிலும், அவர்களது கல்வி வளர்ச்சிக்காக செயற்றிட்டங்களை முன்னெடுப்பதிலும் அவர் முன்னின்று செயற்பட்டுவந்தார்.

மாவிட்டபுரத்தைச்சேர்ந்த இவர் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்றபின்னர் விழிப்புலனற்றோருக்காக செயற்றிட்டங்களை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டிவந்தார். (1)

## மூதூர் நிவாரணப் பணியாளர் படுகொலை பற்றிய விசாரணைகள் அ'புரம் நீதிவானின் பொறுப்பில்

மூதூரில் நிவாரணப் பணியாளர் 17 பேர் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்துவதற்காக நீதிச் சேவைகள் ஆணைக்குழு அநுராதபுரம் நீதிவான் வசந்த ஜினதாஸவை நியமித்திருக்கின்றது.

இந்த விசாரணைகளை நடத்துவதற்கான அதிகாரம் கிடைக்கும் வகையில் அநுராதபுரம் நீதிவான் வசந்த் ஜினதாஸ, மூதூர் மற்றும் திருகோணமலை மேலதிக நீதிவானாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மூதூரில் கொல்லப்பட்ட இந்த நிவாரணப் பணியாளர்கள் 17 பேரினதும் மரண விசாரணைகள் ஏற்கனவே அநுராதபுரம் வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி, தனஞ்சல வைத்தியரட்ணவினால் திருகோணமலை வைத்தியசாலையில் நடத்தப்பட்டன.

துப்பாக்கிச் சூட்டின் காரணமாக இந்த மரணங்கள், ஓகஸ்ட் மூன்றாம் திகதியோ அல்லது நான்காம் திகதி அதிகாலையோ இடம்பெற்றிருக்கலாமென விசாரணைகளின்போது தெரியவந்தது.

இவை தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் அநுராதபுரம் நீதிவானால் இன்னும் இரு வார காலத்தில் மூதூர் அல்லது திருகோணமலை நீதிவான் நீதிமன்றங்களில் நடத்தப்படவுள்ளன. புதைக்கப்பட்ட நிவாரணப் பணியாளர்களின் சடலங்கள் விசாரணைக்காகத் தோண்டியெடுக்கப்படவுள்ளன என்றும் தெரிய வருகிறது. (ஐ)

## காலிக் கடலில் எண்ணெய் படிமத்தை அகற்றும் பணியில் இந்தியக் கப்பல்

கொக்கல கடற்பரப்பில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகிய பங்களாதேஷ் கப்பலிருந்து வெளியேறிய எண்ணெய்ப் படிமங்களை அகற்றும் பணியில் இந்தியக் கரையோர பாதுகாப்புப் படையின் கப்பல், சுழியோடிகளுடன் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேக்கு மரங்களை ஏற்றிக் கொண்டு பங்களாதேஷ் யான்ஹொன்னிலிருந்து, மும்பாய் நோக்கிச் சென்று கொண்டிருந்த 'அம்னெட்ஷா' என்ற கப்பல் காலிக்கு அருகிலுள்ள கொக்கல கடற்பரப்பில் மூழ்கியது.

இலங்கைக் கடற்படையினரால் கப்பலில் இருந்த 34 பேர் காப்பற்றப்பட்டனர். எனினும், குறிப்பிட்ட கப்பலில் இருந்து வெளியேறிய எண்ணெய் காரணமாக கொக்கல கடற்கரையோரப் பகுதியில் சுற்றாடல் பாதிக்கப்பட்டது.

எண்ணெய்ப் படிமங்களை அகற்ற உதவுமாறு இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்ற இந்தியா தனது கரையோரக் கப்பலையும், சுழியோடிகளையும் அனுப்பியுள்ளது. எண்ணெய்ப் படிமங்களை அகற்றும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எண்ணெய்ப் படிமங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவச் சிப்பாய்கள் மூவர் மயக்கமுற்றனரென்றும் தெரிவிக்கப் படுகிறது. (உ)

## படகுகளில் வெளிநாடு செல்ல முயன்ற 28 பேர் கற்பிட்டிப் பொலிஸாரால் கைது

கொழும்பு,செப்.12

வெளிநாட்டுக்குப் படகுகள் மூலம் சட் டவிரோதமாகச் செல்ல முயன்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் புத்தளம், கற்பிட்டி கடலோரப் பகுதியில்வைத்து 28 பேர் நேற்று முன்தினம் கற்பிட்டிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் நேற்று கொழும்பு பிரதம நீதிவான் மன்றில் நீதிவான் குசலசரோஜினி வீரவர்த்தன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் சார்பில் விடுக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான் அவர்களுக்கு எதிரான் விடயத்தை விசாரிக்கும் பொறுப்பை குற்றப் புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்க அனுமதியளித்தார். (க)

## பொன்னாலை வரதராஜப்பெருமாள் தேர்த்திருவிழா நாளை

யாழ்ப்பாணம்.செப்.12

பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலய தேர்த்திருவிழா நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளது.

நாளை அதிகாலை 1008 சங்காபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையின்பின் 9.45 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளுவார்.

முற்பகல் 11.30 மணிக்கு உறியடி உற்சவமும் பிற்பகல் ஒரு மணிக்கு கிருஷ்ண ஜெயந்தி என்பன இடம்பெறும்.

இரவு 11 மணிக்கு ஸ்னுபனாபிஷேகம், பூசை, தாலாட்டு, பஜனை என்பன இடம்பெறும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திருவடிநிலைக்குப் புறப்பட்டு முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (203-28)

## இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள் சம்பளம் பெற ஆளுநர் ஏற்பாடு

காரைதீவு, செப். 12

அண்மைக்கான அசாதாரண சம்பவங்களினால் நாட்டில் இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவருடாக மாதாந்த சம்பளத்தைப் பெறமுடியுமென வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் மோஹான் விஜதிலக அறிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் இடம் பெயர்ந்த ஆசிரியர், அதிபர், கல்வி அதிகாரிகள், சிற்றூழியர்களின் மாதாந்த சம்பளத்தையும், சம்பள முற்பணத்தையும் வழங்க ஆவன செய்யவேண்டுமென ஆளுநரைக் கேட்டுக்கொண்டபோதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

இடம்பெயர்ந்திருக்கின்ற அந்தந்தப் பிரதேசத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவருக்கு அறிவிக்கும் பட்சத்தில் மாதாந்த சம்பளத்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

கடந்த மாதச் சம்பளம் பெறாதவர்களும் இம்மாதச் சம்பளத்துடன் சேர்த்துப் பெறமுடியும். அதன் காரணமாக இடம்பெயர்ந்த அரச ஊழியர்களுக்கு மூன்று மாதகால விசேட விடுமுறையும், தொடர்ந்து மாதாந்த சம்பளமும் வழங்குவதற்கு சுற்றுநிருபமொன்று வகைசெய்வதாக பொதுச் செயலாளர் த.மகாசிவம் மேலும் கூறினார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வூதியம் கிடைக்க ஆவனசெய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்.செப்.12

ஏ-9 வீதி மூடப்பட்டுள்ளதை அடுத்து குடா நாட்டில் தங்கியுள்ள தென்னிலங்கை மற்றும் வன்னிப் பகுதி ஓய்வூதியர்கள் தமக்கு ஓய் வூதியம் கிடைக்க யாழ். அரச அதிபர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்பகுதி அரச அலுவலகங்களில் கட மையாற்றும் அலுவலர்கள் தத்தமது சம்பளத் தைப் பெற அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளதாக பத்திரிகை வாயிலாக நாம் அறிந்து கொண்டோம்-

மேற்படி அரச அலுவலர்களைப் போலவே நாமும் பெரும் நிதிநெருக்கடியை எதிர்நோக்கி யுள்ளோம். பணமின்மையால் அத்தியாவசி யப் பொருள்களைக் கூட எம்மால் கொள் வனவு செய்ய முடியவில்லை.

எனவே எமது இக்கட்டான நிலைமையை கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி ஓய்வூதியத்தைப் பெற நடவடிக்கை எடுக்கு மாறு கேட்டுக்கொள்கின்றோம்- என்று ஓய் வூதியர்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

# தமிழினப் படுகொலையை கண்டித்து ரொறென்ரோவில் கவன ஈர்ப்பு

ரொறென்ரோ, செப். 12

ரொறென்ரோவில், தற்போது இடம் பெற்றுவரும் அப்பாவிப் பொதுமக்கள் மீதான கொலைகளைக், குறிப்பாக முல் லைத்தீவு - செஞ்சோலை வளாகத்தில் பாட சாலை மாணவிகள் படுகொலைசெய்யப்பட் டதைக் கண்டித்து கனடா நாட்டின் ரொறென்ரோ நகரில் நேற்றுமுன்தினம் மாலை கவன ஈர்ப் புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

டாக்டர் ரேமன்ட் சோ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல்லின மக்களும் கலந்துகொண்டதோடு கனேடியத் தமிழ்ப் பேரவை மற்றும் முஸ்லிம் பேரவை உறுப்பினர்களும் மேலும் பல சமூக அமைப்புகளின் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசால் தமிழ் மக்கள் மீது கண்மூடித்தனமாக நடத்தப்படும் படுகொலை களைக் கண்டித்து, இத்தகைய படுகொலை கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என் றும், கனேடிய அரசும், சர்வதேச நாடுகளும் இலங்கை அரசை வற்புறுத்தவேண்டும் என் றும் கவன ஈர்ப்புப் போராட்டத்தில் வலியுறுத் தப்பட்டது. (த)

# நாகேஸ்வரத்தில் நாளை வருடாந்த் தோர்த்திருவிழா

யாழ்ப்பாணம்.செப்.12

அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திரு விழா நாளை புதன்கிழமை நடைபெறவுள் ளது.

காலை 6 மணிக்கு கலசசங்காபிஷேகமும் 9.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் தேர்த்திருவிழாவும் இடம் பெறும்.

அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு உறியடியும், அமரர் அருட்கவி சீ. விநாசித் தம்பிப் புலவர் இயற்றிய பிரார்த்தனைப் பாடல்கள் நூல்வெளியீடும் நடைபெறும்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை தீர்த் தோற்சவம் இடம் பெறும்.

## சமய சந்நிதிகளில்

கல்வியங்காடு.செப்.12

வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாளை புதன்கிழமை கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நடைபெறவுள் ளது.

காலை 8 மணியளவில் அஷ்டோத்திர சகஸ்ர சங்காபிசேகமும் அதனைத்தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை உறி யடி உற்சவம் நடைபெறும். (75)

* * *

கோப்பாய்,செப்.12

வடகோவை ஸ்ரீ சக்ராழ்வார் ஆலய வரு டாந்த மகோற்சவ உறியடி உற்சவ திருவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

மறுநாள் வியாழக்கிழமை தீர்த்மும் கொடி யிறக்கமும் இடம்பெறும். (72)

# ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை டிசெம்பர் 15ஆம் திகதி ஆரம்பம்

## 3 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் தோற்றுவர்

கொழும்பு, செப். 12

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எதிர் வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்ப மாகுமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை இப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்கு 5 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளார்கள். இப்பரீட் சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் 16 வயது அல்லது 16 வயதுக்கு மேற்பட்டிருப் பின் அவர்களது தேசிய அடையாள அட்டை யையும், 16 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் தபால் அடையாள அடையையும் காண் பிக்கமுடியுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

# கனேமுல்ல படைமுகாம் அருகே கிளைமோர் குண்டு வெடித்தது

## பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, செப். 12

கனேமுல்ல விசேட அதிரடிப்படை முகா மருகே நேற்றுமுன்தினம் இரவு 10 மணிய ளவில் கிளைமோர்க் குண்டு ஒன்று வெடித் தது. இதில் எவருக்கும் பாதிப்பு ஏற்பட வில்லை. இரண்டு வாகனங்கள் சேதமடைந் தன.

இந்தக் கிளைமோர்க் குண்டுவெடிப்புத் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற் கொண்டுவருகின்றனர் என்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித் தார்.

குண்டுவெடிப்பைத் தொடர்ந்து கனே முல்லப் பகுதியில் தீவிர தேடுதல் நடத்தப் பட்டபோதும் எவரும் கைதுசெய்யப்பட வில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-04)

# அமைச்சர் மங்கள ரஷ்யா பயணம் தனபாலவுக்கு ஆதரவு கோருவார்!

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமர வீர ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கான தேர்தலில் போட்டியி டும் இலங்கையின் ஜயந்த தனபாலவுக்கு ஆதரவு கோரி மங்கள சமரவீர இந்தப் பய ணத்தை மேற்கொண்டுள்ளார் என வெளி விவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாத பிற்பகுதியில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் தேர்தல் நடைபெறவுள் ளது.

ரஷ்யாவுக்குக் கடந்த சனிக்கிழமை இரவு பயணம் மேற்கொண்ட மங்கள சமரவீர, இரு தரப்பு உறவுகள் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்தும் பேச்சுகள் நடத்துவார் என்று தெரி கிறது.

ரஷ்யாவிலிருந்து இன்று திங்கட்கிழமை ஹவானாவுக்குப் புறப்பட்டுச் செல்லும் மங் கள சமரவீர அங்கு நடைபெறவுள்ள சர்வ தேச வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட் டில் பங்கேற்கவுள்ளார்.

# வாகரை கஜுவத்தையில் இருதரப்பும் ஷெல் வீச்சு

ஏறாவூர், செப்.12

மட்டக்களப்பு மாவட்டம், வாகரை கஜுவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பலத்த ஷெல் தாக்குதல் இடம்பெற் றுள்ளது. இரவு 10.30 மணிதொடக்கம் சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து எதுவும் தெரியவரவில்லை.

இத்தாக்குதலால் அப்பகுதி மக்கள் தமது இடங்களிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு இடம் பெயந்து வேறு பகுதிகளுக்குச் சென்று மக்கள் நேற்றுக்காலை மீண்டும் சொந்த இடம் திரும்பினர். (த-157)

## உருக்குலைந்த நிலையில் 12 சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், செப். 12

கொடிகாமம் பகுதியிலிருந்து மீட்கப்பட் டதாகக் கூறப்படும் 12 சடலங்கள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் பொலி ஸாரால் ஒப்படைக்கப்பட்டன. அனைத்துச் சடலங்களும் அழுகிய நிலையில் உருக் குலைந்து அடையாளம் தெரியாத நிலை யில் காணப்பட்டன.

கொடிகாமம் பொலிஸாரால் ஒப்படைக் கப்பட்ட இச்சடலங்களில் 10 ஆண்களுடை யவை என்றும், 2 பெண்களுடையவை என் றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரி வித்தன. ஆண்களின் சடலங்களில் நீளக் காற்சட்டைகளும் சேட்டும் காணப்பட்டன என்றும் பெண்களின் சடலங்களில் உள்ளாடை கள் மட்டுமே காணப்பட்டன என்றும் தெரி விக்கப்பட்டது.

அச்சடலங்கள் அனைத்தும் 20 முதல் 30 வயது மதிக்கத்தக்க இளம்பராயத்தினருடை யதாக இருக்கலாம் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த)

## தென்மராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்மராட்சியில் நேற்று மீண்டும் முழுநேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதற் கான காரணம் அறிவிக்கப்படவில்லை. கடந்த வாரத்தில் காலை 10 மணி முதல் மாலை 4.30 மணிவரை இங்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டு வந்தது.

தென்மராட்சி தவிர்ந்த குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் நேற்றுக் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை வழமைபோன்று ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டிருந்தது.

## இரு இளைஞர்களைக் காணவில்லையென முறைப்பாடு

பருத்தித்துறை வெளிச்சவீட்டுப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களை காணவில்லை என்று அவர்களது உறவினர்காளால் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவல கத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த அன்ரன் செல் வரட்ணம் (வயது-24), அன்ரனி அருள்தாஸ் (வயது-25) ஆகியோரே காணமற்போனவர் களாவார்.

இவர்கள் இருவரும் கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7.20 மணிக்கு அருகி லுள்ள வைத்தியசாலைக்கு மருந்து எடுப்ப தற்காக வீட்டிலிந்து புறப்பட்டனர் என்றும்- இதுவரை வீடு திரும்பவில்லை என்றும்- முறை யிடப்பட்டுள்ளதாக மனிதஉரிமைஆணைக் குழு வின் அதிகாரி தெரிவித்துள்ளார் (79)

## அரசுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைச் செவ்வனே அமுல் செய்து நாட்டின் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு முன் னுரிமை அளிக்கப்படவேண்டும். அவ்வாறு அரசு முயற்சி எடுக்கும் பட்சத்தில் எதிர்க் கட்சி அதற்கு முழு ஆதரவை வழங்கும் என்று ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்திப் பின்போது ஜனாதிபதியிடம் வலியுறுத்திக் கூறினார்.

சமாதான முயற்சிகளிலும் இதர விடயங் களிலும் அரசு நேர்மையுடனும் வெளிப்படை யாகவும் செயற்படவேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டம், அணிசேரா நாடுகளின் மாநாடு என்பவற்றுக் காக வெளிநாடு செல்லவிருப்பது பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி, வெளிநாட்டு விஜ யத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் சமாதான முயற்சிகளை முழுவேகத்துடன் முன்னெடுக்க உள்ளதாகவும் ரணில் விக்கிம சிங்கவிடம் தெரிவித்தார் என்று அறியவந் தது. (ஐ-5)

## மன்னாரில் இன்று உண்ணாவிரதம்

மன்னார், செப். 12

யாழ்ப்பாணம் - அல்லைப்பிட்டிப் பகுதி யில் காணாமல்போன அருட்தந்தையை விடுவிக்கக்கோரி இன்று மன்னார் நகரி லுள்ள புனித செபஸ்ரியன் பேராலயத்தில் விசேட வழிபாட்டு நிகழ்வுகளும் உண்ணா விரதப் போராட்டமும் இடம்பெறவுள்ளன.

காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரை இடம்பெறும் இந்த நிகழ்வில் அருட்தந்தை, அருட்சகோதரி, மதகுருமார் கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொள்ள வுள்ளனர்.

## மோதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் வகையில் இணைத்தலைமை நாடுகளின் தீர்மானம் அமையும் என்று எதிர்பார்க்கப்படு வதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றைய இணைத்தலைமை நாடுகளின் மாநாட்டுக்கு நோர்வேயின் சர்வதேச அபி விருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தலைமை வகிப்பார். (ஐ)

## முகமாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஒப்படைக்கப்பட்டன என்று படைத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

முகமாலை முன்னரங்கப் பகுதியை படையினர் கைப்பற்றி விட்டனர் என நேற்று முன்தினம் இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-

முகமாலையில் கைப்பற்றப்பட்ட பகுதியில் படையினர் தங்கள் நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர் என்றும் அங்கு மேலும் முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபடும் திட்டம் எதுவும் கிடையாது என்று இராணவ வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

## ஏ-9 வீதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில் - அவர்களது மனித உரிமைகள் விவகாரத்தில் தாங்கள் கொண்டிருக்கும் அளவில்லா ஈபாடுகளுக்காக எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீலங்காவின் தற்போதைய நிலை பற்றி ஆராய்வதற்காக இணைத்தலைமை நாடுக ளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடுவதாக நாம் அறிகின்றோம். கடந்த மாதம் 11ஆம் திகதி தொடக்கம் ஏற்பட்ட அசாதாரண நிலைமை களை அடுத்து ஏ-9 வீதி மூடப்பட்டது. தொலைத் தொடர்பிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டன இத னால் நாம் ஏனைய உலக நாடுகளுடன் தொடர் புகள் இன்றி தனிமைப்படுத்தப்பட்டு பட்டி னிச்சாவை எதிர்நோக்கியுள்ளோம்.

இந்த நிலையில் எமது மக்களின் நிலையை செம்மைப்படுத்துவதற்கு உடனடியாக மேற் கொள்ளப்பட வேண்டிய முன்னெடுப்புக் களை தங்களின் கவனத்திற்கு அறியத்தரு கின்றோம்.

- பட்டினிச்சாவிலிருந்து மக்களைப் பாது காக்கவும் உணவுப் பொருள்களை தடையின்றி கொண்டுவருவதற்கும் வசதியாக ஏ-9 வீதி திறக் கப்படுதல் அவசியமாகும்.
- தமிழ் மக்கள் சுதந்திரமான காற்றை சுவாசிக்கவும் குடாநாட்டில் இராணுவத்தின ரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகள் விடு விக்கப்பட்டு மக்கள் தமது சொந்த இடங்க ளில் குடியமரவும் நடவடிக்கை எடுக்கப்படு தல் அவசியம்.
- தமிழர்கள் நிம்மதியாக வாழவேண்டு மானால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் முழுமை யாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.
- இனப் பிரச்சினையை தீர்க்கும் முக மாக திட்டவட்டமான- தெளிவான பிரேர னைகளை முன்வைப்பதன் மூலம் பேச்சுக் களை விடப்பட்ட இடத்திலிருந்து மீண்டும் ஆரம்பித்தல்.
- மீனவர்கள் தமது வாழ்வாதாரமான மீன்பிடித்தொழிலை தொடர்வதற்கு அனும தித்தல்.
- நீதியான- சமாதானத்துக்கு வழி வகுக் கக் கூடிய திட்டவட்டமான செயற்பாடுகளில் இரு பகுதியினரும் ஈடுபடும் வண்ணம் தங் கள் உதவி வழங்கல்களை இதற்கு இசை வாக்கிக் கொள்ளுதல்- என்று அந்தக் கடிதத் தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org